**செ.வெ.எண்: 12 / ஆகஸ்ட் / 2021** **நாள்:04.08.2021**

செய்திக் குறிப்பு

-----------

தமிழக அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையில் செயல்படும் தமிழ்நாடு **நரிக்குறவர் நல வாரியத்தில்** கீழ்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது, அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவும், விடுபட்ட நரிக்குறவர் இன மக்கள் நரிக்குறவர் நல வாரியத்தில் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளலாம், ஏற்கனவே உறுப்பினர்களாக பதிவு பெற்றவர்கள் நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக தொலைபேசி எண்.0431-2401860 தொடர்பு கொள்ளலாம்.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ் உதவித்தொகை:**

விபத்தினால் மரணம் -ரூ.1,00,000/-

ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/-முதல்1,00,000/- வரை.

இயற்கை மரணம் - ரூ.20,000/-

ஈமச்சடங்கு செலவினம் - ரூ.5,000/-

**<u>கல்வி உதவித்தொகை:</u>**

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு ரூ.500/-

6 முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.1000/-

10-ஆம் வகுப்பு வரை படித்து வரும் பெண்குழந்தைகளுக்கு ரூ.1000/-

10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு (இருபாலருக்கும்) ரூ.1000/-

11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1000/- 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1500/-

12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு (இருபாலருக்கும்) ரூ.1500/-

முறையான பட்டப்பழுப்புக்கு ரூ.1500/- மாணவர் இல்ல வசதியுடன் கூடிய முறையான பட்ட படிப்பிற்கு ரூ.1,750 /-வரை

முறையான பட்ட மேற்படிப்புக்கு ரூ.4,000/-, மாணவர் இல்ல வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு ரூ.6,000 /-வரை

தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு ரூ.4,000/- மாணவர் இல்ல வசதியுடன் கூடிய தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு ரூ.6,000 /-வரை

ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு ரூ.1,000/-,மாணவர் இல்ல வசதியுடன் கூடிய ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சி படிப்பிற்கு ரூ.1,200/-

திருமண உதவித்தொகை ரூ.2000/-

**<u>மகப்பேறு உதவித்தொகை :</u>**

மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6000/-

கருச்சிதைவு/கருக்கலைப்பு ரூ.3000/-

மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் ரூ.500/-

முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ.1000/-

**தொழில்தொடங்க மானியம் :**

தனிநபர் தொழில் தொடங்க மான்யம் ரூ.7500/-

குழுவாகத் தொழில் தொடங்க மானியம் ரூ.10000/- தனிநபருக்கு (அ) ரூ.1,25,000/- அதிகபட்சமாக குழுவிற்கு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வசித்து வரும் நரிக்குறவர் இனத்தை சார்ந்தவர்கள் நலவாரியத்தால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருச்சிராப்பள்ளி.**